අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/4/58/16/01/13 | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date 2024.07.

நேர்முகப் பரீட்சை இலக்கம்: ..............................................

நேர்முகப் பரீட்சை சபை இலக்கம்: .......................................................

வண/ திரு/ திருமதி/செல்வி: ...........................................................

**இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு 2020/2021(2023)**

**பொது நேர்முகப் பரீட்சை மற்றும் வாய்மொழி மூல நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தல்**

இலக்கம்: 1928/28 மற்றும் 21.08.2015 திகதியிட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பிரமாணக்குறிப்பின் பிரகாரம், 23.09.2023 அன்று நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான எழுத்துப் பரீட்சையின் அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான வாய்மூல நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுகின்றீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்துருகின்றேன்.

02. இந்த நேர்முகப் பரீட்சைக்கு பத்தரமுல்லை, பெலவத்தை, இசுருபாய கல்வி அமைச்சுக்கு ........................ ஆம் திகதி மு.ப/பி.ப ........................ மணிக்கு வருமாறு அறியத் தருகின்றேன்.

03. அந்தத் திகதியில், பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் உள்ளிட்ட கொண்ட கோப்பினையும் அந்த ஆவணங்களின் மீது அவை உண்மை பிரதிகளென நிறுவன தலைவராலும் விண்ணப்பதாரியாலும் உறுதி செய்யப்பட்ட புகைப்பட பிரதிகள் உள்ளடங்கிய இணைவான கோப்பினையும் மேலே காட்டப்பட்ட நேர்முகப் பரீட்சை இலக்கம் மற்றும் நேர்முகப் பரீட்சை சபை இலக்கம், பாடம், பெயர் மற்றும் மொழிமூலத்தை குறிப்பிட்டு நேர்முக பரீட்சை சபைக்கு முற்படுத்த வேண்டும் (www.moe.gov.lk இணைய தளத்தில் வெளியிடப்பட்ட கடித கோப்பு அடடை மாதிரிக்கு ஏற்றதாக). தாங்கள் ஒரு பாடத்துக்கு அதிகமான பாடங்களில் அடிப்படை தகுதிகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரியாயின் ஒவ்வொரு பாடத்துக்கும் வெவ்வேறாக கோப்புகளை முற்படுத்த வேண்டும்.

i நேர்முகப் பரீட்சை அழைப்பு கடிதம்

ii தேசிய அடையாள அட்டை/ வெளிநாட்டுப் பயண கடவுசீட்டு

iii பிறப்பு சான்றிதழ்

iv. சத்திய உறுதியுரை பத்திரம் (தேவைக்கேற்ப)- தொடர்புடைய கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பிற சான்றிதழ்கள் /ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் வேறுபாடுகள் இருப்பின், அதற்கான உறுதிமொழிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

v. பிரிவேனா ஆசிரியர் சேவை/ ஆசிரியர் சேவை / அதிபர் சேவை / ஆசிரியர் ஆலோசகர் சேவை / ஆசிரியர் கல்வியாளர் சேவை / நியமனக் கடிதம், நியமனம் நிரமாக்கலை உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் கடமை ஏற்பு கடிதம்

vi. விண்ணப்பிக்க தகுதி பெறும் சேவையின் முதலாவது வினைத்தின்' தடைதாண்டல் பரீட்சை சித்தியடைந்தமை தொடர்பில் கடிதம் தமற்றுமம் வினைத்திறன் தடைதாண்டல் சலுகை பெற்றிருப்பின் அதற்குரிய கடிதம்.

vii. கல்விச் சான்றிதழ்கள் –

- க.பொ.த (சாதாரணப் பரீட்சை)
- க.பொ.த (உயர்தர பரீட்சை)
- எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்ற ( விசேட ஆளணி வகையின் கீழ் விண்ணப்பித்த) பாடங்களுக்கு உரித்தான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து பெறப்பட்ட பட்டப்படிப்பு சான்றிதழ் மற்றும் விரிவான பெறுபேற்று ஆவணம்.
- ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவிப்பு இலக்கம். 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் தொடர்பான பிற சான்றிதழ்கள்

viii. ஆட்சேர்ப்பு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் 04 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள "குறிப்பு 02" மற்றும் ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலின் இல. 09 இன் அட்டவணை இலக்கம் 03 இற்கமைய, விசேட சேவை ஆளணியின் கீழ் விண்ணப்பித்துள்ள உத்தியோகத்தர்கள், உரிய பாடத்தை பிரதானமான பாடமொன்றாக பட்டத்தில் கற்றுள்ளமை மற்றும் பட்டத்தின் மொத்தப் பாட அலகுகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதியையேனும் விண்ணப்பித்துள்ள பாடத்திற்குரிய பாடங்களாக உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழ்க்கள்.'. ஆவணங்கள் மற்றும் குறித்த விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக உரிய பல்கலைக்கழகத்தின் பதிவாளரால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் சான்றிதழ் ஒன்றை (www.moe.gov.lk உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இணைப்பு 01 மாதிரிப் படிவத்திற்கமைய ) நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும். (பட்டச் சான்றிதழ்லை கல்வித் தகைமைக்காக முன்னிலைப் படுத்தும் உத்தியோகத்தர்கள் மாத்திரம்)

ix. பூரணப்படுத்தப்பட்டு, வலயக் கல்விப் பணிப்பாளரால் சான்றுப்படுத்தப்பட்ட மாதிரிப் படிவம் (இணைப்பு 02).

x. ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 05 (அ) பொது ஆளணியினர் மற்றும் (ஆ) விசேட ஆளணியின் கீழ் தரப்பட்டுள்ளவாறு கற்பித்தல் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக பூரணப்படுத்தப்பட்ட இணைப்பு 03 மாதிரிப் படிவம் மற்றும் உரிய பாடசாலை அதிபர்களூடாக உறுதிப்படுத்தப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட கற்பித்தல் கால அட்டவணை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

xi சமீபத்தில் பெற்றுக் கொண்ட கிராம அலுவலர் சான்றிதழ்

04. விண்ணப்பத்தின் கடைசித் திகதிக்கு முன்னதாக (2021.07.30) அனைத்து தகுதிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு எழுத்துப் பரீட்சைக்கு தோற்றிய மொழி மூலமான நேர்முக பரீட்சைக்கு தோற்ற வேண்டும். அத்துடன் உரிய கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் விண்ணப்பிக்கும் மொழி மூலத்திலேயே பெறப்பட்டிருக்க வேண்டும் என்பது அத்தியாவசியமல்ல

05. அடிப்படைத் தகுதிகள் சரிபார்க்கப்படும் பொது நேர்முகப் பரீட்சையின் போது, மேற்கண்ட ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களைச் சரிபார்த்து ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகுதிகளை நிறைவு செய்ததாக உறுதிசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே வாய்மொழி பரீட்சைக்கு பரிந்துரைக்கப்படுவார்கள். இலக்கம் 2231 மற்றும் 04.06.2021 திகதியிட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஆட்சேர்ப்பு அறிவிப்பு மற்றும் தங்கள் விண்ணப்பத்தின்படி அனைத்து சான்றிதழ்கள்.'.ஆவணங்கள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்பட பிரதிகள் அந்தத் திகதியிலேயே நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும் என்பதோடு அதற்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் பரிசீலிக்கப்படாது.

06. நேர்முகத் தேர்வின் போது உரிய பட்டச் சான்றிதழ்களின் விரிவான பெறுபேற்று ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு பின்னர் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் பரிசீலிக்கப்படாது.

07. ஆட்சேர்புக்கான வர்த்தமானி அறிவித்தலின் இல. 04 இற்குரிய "குறிப்பு 03" இற்கமைய கல்வித் தகைமைகள் பூர்த்தி செய்யப்படவேண்டியது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டு எனின், உரிய பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியங்கள்

ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றாக குறித்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கடிதமொன்று நேர்முகப் பரீட்சையின் போது சமர்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், பின்னராக சமர்ப்பிக்கப்படும் அத்தகைய கடிதங்கள் மீண்டும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

08. அறிவிப்பு இலக்கம் 07ன் தொடரிலக்கம; I, ii, iii, iv மற்றும் v கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிற தகுதிகள் விண்ணப்பதாரியால் உரிய திகதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதை சம்பந்தப்பட்ட திணைக்கள தலைவரான வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். (இணைப்பு 02 மாதிரியின் படி)

09. பொது நேர்முக பரீட்சைக்கு பிறகு நடத்தப்படும் வாய்மொழி பரீட்சைக்கு 20 நிமிடங்கள் வழங்கப்படும், என்பதோடு கற்றல் செயல்முறை பற்றிய அறிவு மற்றும் அந்த நேரத்தில் வழங்கப்பட்ட ஒரு விடய ஆய்வின் அடிப்படையில், பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 01 | கற்றல் கற்பித்தல் செயல்முறை அறிவு | 07 புள்ளிகள் |
| 02 | தர்க்க நியாயப்படுத்துதல் மற்றும் பிரச்சனை தீர்த்தல்<br>i. சந்தர்ப்பத்துக்கு மற்றும் பதவியின் பொறுப்புக்கு பொருத்தமான பகுப்பாய்வு திறன்கள் (04 புள்ளிகள்)<br>ii. பிரச்சனையை சரியாகக் கண்டறிதல், தீர்வுகள் மற்றும் மாற்றுத் தீர்வுகளை வழங்குதல் (03 புள்ளிகள்) | 07 புள்ளிகள் |
| 03 | தொடர்பாடல் திறன்<br>i. திட்டம் (02 புள்ளிகள்)<br>ii. முன்வைப்புத திறன் (02 புள்ளிகள்)<br>iii. மொழியை கையாளும் திறன் (01 புள்ளிகள்)<br>iv. விடயங்களை ஏற்புடையதாக்கும் திறன் (02 புள்ளிகள்) | 07 புள்ளிகள் |
| 04 | ஆளுமை | 04 புள்ளிகள் |
| | | மொத்த புள்ளிகள் 25 |

10. இந்த நேர்முகப் பரீட்சைக்கு பொது ஆளணியினர் கீழ் அல்லது விசேட ஆளணியினர் எண்ணிக்கையில் ஒவ்வொரு பாடத்தின் கீழும் காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையில் இரு மடங்கு எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுகின்றார்கள் என்பதால் தேர்மகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதால் மட்டும் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் III நியமனம் பெறுவதற்கு தகுதி இல்லை என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம்.

11. மேலும், இந்தக் கடிதம் கிடைத்தவுடன், வார நாட்களில் வேலை நேரத்தில் 0112-787330/ 0112-786674 என்ற இலக்கத்துக்கு அழைத்து கடிதம் கிடைத்ததை உறுதிசெய்யுமாறு மேலும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

12. நேர்முகத் பரீட்சையில் கலந்துகொள்வதற்காக பயணச் செலவுகள் அல்லது வேறு எந்தக் கொடுப்பனவும் செலுத்தப்படாது.

ஆர்.டி. ஜமிந்த
சிரேஷ்ட உதவி செயலாளர்
(கல்வி சேவை நிறுவனங்கள்)

கையொப்பம்: ஜே.எம். திலகா ஜயசுந்தர
செயலாளர்

**கவனத்திற்கு**: இந்த நேர்முகப் பரீட்சையில் குறிக்கப்பட்ட திகதியில் தாங்கள் பங்கேற்கவில்லை என்றால், அதற்காக பிறிதொரு தினம் வழங்கப்பட மாட்டாது என்பதால் அத்தகைய கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதோடு நேர்முகப் பரீட்சையில் பங்கேற்கும் சந்தர்ப்பத்திலேயே அதற்கான ஆவணங்களை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.